அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விளம்பி ஆண்டு மாசி - பங்குனி மார்ச் 2019 முரசு 12 ஒலி 141



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தின் இயற்கை சூழலில்...

# பஞ்ச சுத்தி கிரியா

உடல்உறு பிணியால் உயிர்உடல் கெடாவகை
அடல்உறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
– அகவல்

## "உடல் நலம், மன அமைதி பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழ மூன்று நாட்கள்"



இம்முகாமில்...

- பஞ்ச சுத்தி முறை
- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- தியானம்
- பக்தி

போன்றவை நடைபெறும்

மார்ச் 29, 30, 31 2019

இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம்,
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி
(மூன்று நாட்கள் முழுவதும்)

ஏப்ரல் 26, 27, 28 2019

## பயிற்சியில் கலந்து கொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. அன்பர்கள் பயிற்சியின் முன்தினம் வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும்.
2. பயிற்சியில் கலந்து கொள்வோர் 18-60 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
3. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் இரண்டு பெட்ஷீட் மேலும்
   ஆண்கள்: T.ஷர்ட், ஷார்ட்ஸ் பெண்கள்: சுடிதார் போன்ற ஆடைகளை எடுத்துவரவும்.
   குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்துவரவும்.

பஸ் ரூட்: பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலைபேட்டையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

**சைவ உணவாளர்களுக்கு மட்டுமே அனுமதி**

**உங்கள் ஆரோக்கியத்திற்கான நன்கொடை ரூ. 1,500/-**

40 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

முன்பதிவிற்கு:

**89403 96760, 75020 26565**



# திருச்செவிக்கு விண்ணப்பம்



## போற்றுதல்

அளவையெலாம் கடந்து; மனம் கடந்து; மற்றை
அறிவையெலாம் கடந்துகடந்து; அமலயோகர்
உளவையெலாம் கடந்து; பதம் கடந்து; மேலை
ஒன்றும் கடந்து; இரண்டும் கடந்து; உணரச் சூழுந்த
களவையெலாம் கடந்து; அண்டபிண்டமெலாம்
கடந்து நிறைவான சுகக்கடலே; அன்பர்
வளவையெலாம் இருளகற்றும் ஒளியே; மோன
வாழ்வே; என்உயிர்க்கு உயிராய் வதியும் தேவே.

## முறையீடு

சீர்சான்ற வேதச் செழும்பொருளே
சிற்சொருபப் பேர்சான்ற உண்மைப் பிரமமே
நேர்சான்றோர் நாடும் பரசிவமே நாயேனுக்கு
அன்பு நின்பால் நீடும்படி நீ நிகழ்த்து
ஊட்டுகின்ற வல்வினையாம் உட்கயிற்றால்
உள்ளிருந்தே ஆட்டுகின்ற நீதான் அறிந்திலையோ
வாட்டுகின்ற அஞ்சுபுல வேடர்க்கு அறிவைப் பறிகொடுத்து
என் நெஞ்சு புலர்ந்து ஏங்கும் நிலை.

## பிரார்த்தனை

எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே
எண்ணி நல்இன்புறச் செயவும்
அவ்வுயிர்களுக்கு வரும் இடையூற்றை
அகற்றியே அச்ச நீக்கிடவும்
செவ்வையுற்று உனது திருப்பதம்பாடிச்
சிவசிவ என்று கூத்தாடி
ஒவ்வுறுகளிப்பால் அழிவுறாது இங்கே
ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்.

## தியானம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

# குட்டும் உதையும்

**பிரமன் இனிஎன்னை பிறப்பிக்க வல்லனோ**
**பெய்சிறையில் இன்னும் ஒருகால்**
**பின்பட்டு நிற்குமோ முன்பட்ட குட்டில்**
**பெறுந்துயர் மறந்துவிடுமோ**
**இரவுநிறம் உடைஇயமன் இனிஎனைக் கனவினும்**
**இறப்பிக்க எண்ணம்உறுமோ**
**எண்ணுறான் உதைஉண்டு சிதைஉண்ட தன்உடல்**
**இருந்தவடு எண்ணுறானோ**
**கரவுபெறு வினைவந்து நலியுமோ அதனைஒரு**
**காசுக்கும் மதியேன் எலாம் கற்றவர்கள் பற்றும்**
**நின் திருவருளை யானும் கலந்திடப் பெற்று நின்றேன்**
**தரமருவு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்**
**தலம்ஓங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே.**

*படைப்புத் தொழிலை செய்யும் பிரமன், இந்தமுறை என்னைப் பிறப்பித்துவிட்டான். நான் பிறந்து விட்டேன். இனி இன்னொரு முறை என்னைப் பிறப்பிக்கும் வலிமையை உடையவனோ. முன்பு ஒருமுறை முருகப்பெருமானால் சிறையிடப்பட்டுக் குட்டுபட்ட துன்பத்தை மறந்துவிடுவானோ?*

*கருநிறம் கொண்ட எமன், முற்பிறப்பில் என்னை இறப்பித்து விட்டான். இனி இன்னும் ஒருமுறை இப்பிறப்பில் என்னை இறப்பிக்க நினைப்பானோ? கனவில்கூட நினைக்க மாட்டான். முன்பு மார்க்கண்டேயனைப் பிடிக்கப்போய், சிவபெருமானால் உதைக்கப்பட்டதை மறந்து விடுவானோ? உதைபட்ட காயத்தின் தழும்பு தன் உடம்பில் இன்னும் இருப்பதை எண்ணிப் பார்க்க மாட்டானா? என்று பாடுகின்றார்.*

*இரவு நிறம் உடைய இயமன் என்று எமனுக்கு நிறம் சொல்லுகிறார். இறப்பு என்பது இருள். கருமாதிப் பத்திரிகையின் மூலையில் இன்னும் கருப்புப்பட்டை அடிக்கிறோம். எமன் கருப்பாகத்தான் இருப்பான். அவன் வாகனம் கருப்பு எருமை.*

பிரமனுக்கு இங்கே நிறம் சொல்லவில்லை. அவர் வெள்ளை நிறமாகத்தான் இருப்பார். அவருக்கு அன்னம் வாகனம். அன்னப்பறவை வெண்ணிறம். **தத்துவக் கருத்துகளை வைத்துத்தான் புராண வரலாறுகள் புனையப் பெறுகின்றன.**

## குட்டும் உதையும்

குட்டும் உதையும் இருவகைத் தண்டனைகள். குட்டுவது கையால். உதைப்பது காலால். இருவகைத் தண்டனைகளையும் தலைக்கு ஒன்றாக இருவர் பெற்றனர். குட்டுப்பட்டவன் பிரமன். உதைப் பட்டவன் இயமன். பிறப்பிப்பவன் குட்டுப்பட்டான். இறப்பிப்பவன் உதைபட்டான். குட்டியவர் யார்? உதைத்தவர் யார்? குட்டியவர் முருகன். உதைத்தவர் சிவபெருமான். பிரமன் குட்டுபட்டதேன்? இயமன் உதையுண்டதேன்?

## பிரமன் குட்டுபட்ட வரலாறு

ஒருநாள் பிரமதேவர் திருக்கயிலைக்குச் சென்று சிவபெருமானை வணங்கி மீளும்போது கோபுர வாயிலில் தன் பரிவாரங்களுடன் வீற்றிருந்த முருகவேளைச் சற்றுப் பாராமுகமாய்த் தொழுது அவ்விடம் விட்டு நகர்ந்தார்.



அதுகண்ட முருகவேள் பிரமதேவரை 'இங்கே வருக' என்றழைத்து 'நும் தொழில் யாது?' என வினவவே, பிரம தேவரும் 'யான் படைத்தலைத் தொழிலாக உடையேன்' என்றார். முருகவேள், 'அங்ஙனமாயின் நீர் வேதங்களில் வல்லவரோ?' எனக் கேட்டார். 'யான் வேதங்களை உணர்ந்துளேன்' எனப் பிரமதேவர் மறுமொழி புகன்றார். அதனைக் கேட்ட முருகவேள் வேதமொழிகளில் ஒன்றைக் கூறுமாறு பணித்தார்.

பிரமதேவர் வேதமந்திரங்களைக் கூறப் புகுந்து 'ஓம்' என்று தொடங்கினார். அவர் ஓங்காரத்தைக் கூறிய அளவிலேயே 'நிறுத்தும்' என்று கூறி அவ்வோங்காரத்தின் பொருளை விளக்குமாறு முருகவேள் பணித்தார். முருகவேளின் திருமுன்னர் ஓங்காரப் பொருளை விரிக்கலாற்றாதவராகிப் பிரமதேவர் விழித்தார்.

முருகவேளோ முறுவலித்து 'நீயும் உன் படைப்புத் தொழிலும் இவ்வளவுதானா?' என்று எள்ளி நான்கு தலையிலும் படுமாறு நறுக்கென்று குட்டி, அருகிலிருந்த பரிவாரங்களை நோக்கி இவனைக் கொண்டுபோய்க் கந்த மலையில் சிறைப்படுத்துங்கள் என்றார். பரிவாரங்களும் அவ்வாறே அவரைச் சிறையிட்டன.

*பிரமனைச் சிறைப்படுத்திய முருகவேளோ கந்தமலையில் வீற்றிருந்து தாமே படைப்புத் தொழிலைச் செய்யத் தொடங்கி எண்ணில்லாத உயிர்த் தொகைகளைப் படைக்கலானார். இங்ஙனம் பலகாலம் படைப்புத் தொழிலை முருகவேளே செய்தார். பிரமதேவர் சிறையிலிருந்தார்.*

*பிரமதேவர் நெடுங்காலம் சிறையிலிருப்பதற்கு வருந்தி அவரை விடுவிக்க விரும்பிய திருமால் தேவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு கயிலை சென்று சிவபெருமானிடம் முறையிட்டார். பெருமானோ திருநந்திதேவரை அழைத்து 'நீ கந்தமலை சென்று நம் குமரனைக் கண்டு நாம் கூறியதாகக் கூறிப் பிரமனைச் சிறைவிடுவிக்கச் செய்து வருவாய் என்றருளினார். நந்திதேவர் சென்று முருகப்பெருமானிடம் கூறினார். முருகவேளோ பிரமனை விடுவிக்க மறுத்து, 'இனியும் இங்கு நிற்பையாகில் நின்னையும் சிறையிடுவோம்' என்று நந்திதேவரை வெருட்டினார். நந்திதேவர் கயிலைக்கு மீண்டு சென்று சிவபெருமானிடம் நிகழ்ந்தவற்றைக் கூறினார்.*

*அங்ஙனமாயின் யாமே கந்தமலைக்குச் சென்று கந்தனைக் காண்பன் என்றார். பெருமான் வருதலைக் கண்ட கந்தவேள் விரைந்து எதிர் சென்று திருவடிகளில் வணங்கி, 'ஐயனே! இங்கு எழுந்தருளியது என்னையோ!' என்று இறைஞ்சி அழைத்து வந்து பீடத்தில் இருத்தி அருகில் தொழுது நின்றார். 'குமரனே! நீ அயனைச் சிறை செய்தாய். திருமால் முதலிய தேவர்கள் வருந்துகின்றனர். அவனை விடுவிக்கும் பொருட்டே யாம் வந்தோம். அவனை விட்டிடுக' எனப் பெருமான் கந்தவேளை பணிக்க, அதுகேட்ட ஆறுமுகன், 'பிரணவத்தின் பொருளை அறியாத பேதையாம் இப்பிரமனோ உலகங்களையும், உயிர்களையும் படைப்பது? இவனோ வேதம் வல்லான்? படைப்புத் தொழிலைப் பெற்ற அகந்தையால் இவன் யாவரையும் மதித்திலன். அகந்தை தவிராத அயனைச் சிறை நீக்கேன்' எனச் செப்பினார்.*

*'நாம் நந்தியை அனுப்பும்போதும் மறுத்தாய், நாமே நேரில் வந்து கூறியும் மறுக்கிறாய். இது நன்றன்று' என்று கோபிப்பார்போல் சிவபெருமான் கூறலும் முருகவேள் பிரமதேவனை விடுவித்தார். சிறை கிடந்து செருக்கு நீங்கிய பிரமதேவர் சிவபிரானையும் முருகவேளையும் வணங்கி விடைபெற்றுத் தன் இடம் சென்று முன்போல் படைப்புத் தொழிலை செய்கலானார். ஆக பிரமனுடைய அகந்தை - செருக்கு - ஆணவம் அவரைக் குட்டுபடச் செய்தது.*

**//06//**

## இயமன் உதையுண்ட வரலாறு

முன்னொரு காலத்தில் மிருகண்டு முனிவர் என்பவர் மகப்பேறு வேண்டித் தவமியற்றினார். அவர் தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் அவர்முன் தோன்றி 'யாது வேண்டினை' என்றார். முனிவர் புத்திரப்பேறு வேண்டும் என்று குரையிரந்தார். சிவபெருமான், 'தீக்குணம் அனைத்தும் கொண்டவனாய் அறிவற்றவனாய் உறுப்புக்கள் குறைவும் பழுதும் உற்றவனாய் நூறு ஆண்டுகள் நோயுடன் வாழும் மகன் வேண்டுமோ? அழகும் அறிவும் மிக்கவனாய் உறுப்புக் குறைவில்லாதவனாய் நோயில்லாதவனாய் பதினாறே ஆண்டுகள் வாழும் மகன் வேண்டுமோ? கேள்' என்றார்.

முனிவர் பதினாறு அகவையுடைய அறிவுள்ளவனையே விரும்புகிறேன் தந்தருள்க என்றார். இறைவன் அருளால் முனிவர்க்கு ஒரு மகன் பிறந்தான். பதினாறு அகவையே அருளப்பட்டுப் பிறந்த அவனுக்கு மார்க்கண்டேயன் என முனிவர் பெயரிட்டார்.

மார்க்கண்டேயர் வளர்ந்து எல்லாக் கலைகளிலும் வல்லவராகிச் சிவபூசையில் சிறந்தவராகிச் சிவனடியாராய் விளங்கினார். அகவை பதினாறு ஆயிற்று. அவரை அழைத்துச் செல்ல இயமனின் தூதர்கள் வந்தனர். அப்போது மார்க்கண்டேயர் சிவபூசை செய்து கொண்டிருந்தமையால் அவரைப் பிணித்துச் செல்ல தூதரால் இயலவில்லை. திரும்பிச் சென்று இயமனிடம் செப்பினர். நானே சென்று வருகிறேன் என்று இயமனே வந்தான்.

மார்க்கண்டேயர் திருக்கடவூரில் சிவபூசை செய்து கொண்டிருந்தார். அவரை இயமன் அழைத்தான். சிவபூசை செய்து சிவனருள் பெற்றவர் இயமனின் பாசத்திற்கு உட்படார். ஆதலின் நம்மை அழைப்பதில் பயனில்லை, நீர் செல்லலாம் என்றார் மார்க்கண்டேயர். அதுகேட்ட இயமன் கோபித்து இடிபோல் முழங்கி, நமக்கும் சிவபூசையே இவ்வதிகாரத்தையும் பாசம், சூலம், தண்டம் ஆகிய ஆயுதங்களையும் அருளியது. சிவபூசை நின் பாவத்தை விலக்கலாமேயன்றி நாம் வீசும் பாசத்தை விலக்காது என்று மொழிந்து பாசத்தை வீசி மார்க்கண்டரைப் பற்றப் புகுந்தான்.

மார்க்கண்டேயர் சிவபிரானைத் தழுவிக் கொண்டார். இயமன் வீசிய பாசக்கயிறு மார்க்கண்டேயரையும் அவர் தழுவிய சிவலிங்கத்தையும் சுற்றிக் கொண்டது. இயமன் கயிற்றை வலித்தான். சிவலிங்கத்தினின்றும் சிவபெருமான் வெளிப்பட்டார். தம்மையே சரணடைந்து தழுவிக் கொண்ட மார்க்கண்டேயர்க்கு அருளவும், தம்மீதே பாசத்தை வீசத் துணிந்த மறலியைத் தண்டிக்கவும் எழுந்த

சிவபிரான், 'மார்க்கண்ட அஞ்சேல்!' என்று கூறியவாறே தோன்றி மறலியைக் காலால் உதைத்து வீழ்த்தினார். சிவபிரானின் திருக்கரம் மார்க்கண்டேயர்க்கு வாழ்த்துக் கூறி அறக்கருணை புரிந்தது. திருக்கால் மறலியை உதைத்து வீழ்த்தி மறக்கருணையைக் காட்டிற்று.

எமனைக் காலால் உதைத்தமை குறித்த வள்ளலின் தத்துவ வியாக்யானம் வசனபாகத்திலிருந்து..

**மார்க்கண்டர்** என்பது மயக்கமாகிய மறைப்பென்னும் மரணத்தைத் தவிர்த்தது. **ருத்திரன்** என்பது தனித்த ஆன்ம அறிவு. **எமன்** என்பது மயக்கத்தைத் தரத்தக்க வெகுளி, சினம் முதலியன. **இடது காலால் எமனை உதைத்ததென்பது:** இடது என்பது சந்திரகலை, கால் என்பது பிராணவாயு; ஜனன மரணத்தை உண்டுபண்ணுவது சந்திரசூரிய கதி. ஆதலால், அஞ்ஞான பாசத்தால் **சினமாகிற** கூற்றுவன் கட்ட, **விவேகியென்னும்** மார்க்கண்டன் **ருத்திரன்** என்னும் ஆன்ம அறிவோடு கூடவே, மேற்படி ருத்திரன் **விந்து நஷ்டம் செய்கின்ற இடகலையை** மேலேற்றி, **குணங்களாகிய** சூலத்தால் கூற்றை ஒழித்து, அருளாகிய சத்துவமயமாய் நீடிக்கச் செய்வது - எமசம்மாரம்.

இத்தெய்வமணிமாலைப் பாடலில் நம் வள்ளல் பெருமானார் பிரமனுக்கும், இயமனுக்கும் அறைகூவல் விடுகிறார். பிரமன் என்னை பிறப்பிக்க முற்பட்டால் முருகவேள் அருளால் நானும் அவனைக் குட்டுவேன். இயமன் என்னை இறப்பிக்க முற்பட்டால் ஈசன் அருள் என்னை வைத்தே அவனை உதைக்கச் செய்யும் என்கின்றார்.

பிரமனுக்கும், இயமனுக்கும் அறைகூவல் விடுக்கும் இப்பாடலை படிக்கும்போது மெய்யருள் வியப்பு மாலையில் வரும் இதே கருத்துடைய 38ஆம் பாடல் நினைவிற்கு வருகின்றது.

**எனக்கும் நின்னைப்போல நுதற்கண் ஈந்து மதனையே எரிப்பித்தாய்**
**பின் எழுப்பிக் கொடுத்தாய் அருவமதனையே**
**சினக்கும் கூற்றை உதைப்பித்து ஒழித்துச் சிதைவு மாற்றியே**
**தேவர் கற்பம் பலவும் காணச் செய்தாய் போற்றியே.**

முன்னொரு காலத்தில் சிவபெருமான் நெற்றிக்கண்ணால் மன்மதனை எரித்துச் சாம்பலாக்கிவிட்டார். பின்பு ரதிதேவியின் வேண்டுகோளுக்கு இணங்க மன்மதனை எழுப்பிக் கொடுத்தார். உன் கண்களுக்கு மட்டுமே அவன் உருவம் தெரியும். மற்றவர் கண்களுக்கு அவன் அருவமாகத்தான் விளங்குவான் என்று ரதியிடம் சொல்லியே எழுப்பிக் கொடுத்தார்.

மன்மதனை எரித்தவர்; காமதகனம் செய்தவர் சிவபெருமான். வள்ளல் பெருமானாரும் மன்மதனை எரித்தார்; காமதகனம் செய்தார். ஈசன் அருளால் பெற்ற நெற்றிக் கண்ணால்; அக்கினிக் கண்ணால்; ஞானக் கண்ணால்; ஞானாக்கினியால் காமத்தை சுட்டெரித்தார்.

பாடலில் எரிப்பித்து, உதைப்பித்து என்று வருகின்றது. எரித்து, உதைத்து என்று இருந்தால் சிவபெருமானே எரித்தார், உதைத்தார் என்று கொள்ளலாம். ஈண்டு எரிப்பித்து, உதைப்பித்து என்பதால் இறைவனருளால் நம் வள்ளல் பெருமானாரே எரித்தார், உதைத்தார் என்பதே பொருள்.

அதாவது, சிவபிரான் காமனை எரித்ததுபோலவே வள்ளல் பெருமானாரும் காமனை எரித்தார். சிவபிரான் காலனை உதைத்தது போன்றே வள்ளல் பெருமானாரும் காலனை உதைத்தார்.

ஐந்தாம் திருமுறையில் தெய்வமணிமாலையில் கூறுவதை இங்கு ஆறாம் திருமுறையில் மிகவும் விரித்துக் கூறுகின்றார்.

பாடலின் முதலிரண்டு அடிகளுக்கு உரை கண்டோம். அது தொடர்பான ஆறாம் திருமுறை மெய்யருள் வியப்புப் பாசுரத்தினையும் கண்டோம். இனி இங்கு பாடலின் பின்னிரண்டு அடிகளுக்கு உரை காண்போம்.

**கரவுபெறு வினை வந்து நலியுமோ** – மறைந்திருந்த ஊழ்வினை வந்து துன்புறுத்துமோ, (துன்புறுத்தாது என்றே பொருள் கொள்க)

**அதனை ஒரு காசுக்கும் மதியேன்** – அந்த வினையினை நான் ஒரு காசுக்குக்கூட மதிக்க மாட்டேன்.

**எலாம் கற்றவர்கள் பற்றும்** – கற்பதற்குரிய நூல்கள் எல்லாவற்றையும் கற்றவர்கள் பற்றுகின்ற,

**நின் திருவருளை** – உன்னுடைய திருவருளை

**யானும் கலந்திடப் பெற்று நின்றேன்** – நானும் கலந்து நிற்கப் பெற்றேன். நான் உனது திருவருளைப் பெற்றுள்ளதால், பிரமன் இனி என்னைப் பிறப்பிக்கவும், இயமன் இறப்பிக்கவும் இயலாது. ஊழ்வினையும் வந்து தாக்காது.

அருட்ஜோதி ஆனேன் என்று அறையப்பா முரசு
அருளாட்சி பெற்றேன் என்று அறையப்பா முரசு
மருட்சார்பு தீர்ந்தேன் என்று அறையப்பா முரசு
மரணம் தவிர்ந்தேன் என்று அறையப்பா முரசு – திருஅருட்பா

திருச்சிற்றம்பலம்

# மூத்தோர் சொல் அமிர்தம்

*கிருஷ்ணதேவராயர் சில யானைகள் முன்னால் செல்ல, பின்னால் ஒரு யானையின் மீது அமர்ந்து வீதி உலாச் சென்றார். ஒரு வீதியில் செல்லும்போது, எதிரில் வந்த இளைஞன் ஒருவன், முதலில் சென்ற யானையின் தந்தத்தைப் பிடித்து தள்ளினான். யானை சிறிது தூரம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. அரசர் தம் மந்திரியான அப்பாஜியிடம் "இந்த இளைஞன் எவ்வளவு பலசாலியாக இருக்கிறான்?" என்றார்.*

*"அரசே! கவலையில்லாமல் வளர்ந்த பிள்ளை போலும்" என்று அப்பாஜி பதிலளித்தார். மறுநாளே அந்த இளைஞனைப் பற்றிய தகவல்களைச் சேகரித்தார். பின்பு அவனுடைய வீட்டைத் தேடிச் சென்றார்.*

*இளைஞனின் அம்மாவிடம் "அம்மா! ஒரே பிள்ளை என்று மிகுந்த செல்லம் கொடுக்கிறீர்கள். இப்படியே போனால் வளர்ந்த பிறகு பொறுப்பே இல்லாமல் இருப்பான். இனிமேல் அவனுக்கு அளிக்கும் உணவில் உப்பே போடாதீர்கள். 'சம்பாதித்து வந்தால் தான் உப்பு போடுவேன்' என்று சொன்னால், உங்கள் பிள்ளை பொறுப்பானவன் ஆகிவிடுவான்" என்று அப்பாஜி கூறியதும் அவ்வாறே செய்யலானாள்.*

*சில நாட்கள் சென்ற பின்பு, இராயர் முன்பு போலவே யானைப் படையுடன் நகர்வலம் சென்றார். யானையைக் கண்டதும் அந்த இளைஞன் தந்தத்தைப் பிடித்துத் தள்ள முயன்றான். அவனால் முடியவில்லை, அதற்குள் யானை அவனைக் கீழே தள்ளிவிட்டது.*

*"அரசே! பார்த்தீர்களா? சம்பாதிப்பது எப்படி என்ற கவலையால் இளைஞன் பலமிழந்தான். கவலையின்மையே பலத்தைத் தரும் என்பது புரிகிறதா?" என்றார் அப்பாஜி. அரசரும் 'நன்றாகப் புரிந்தது' என்றார்.*

**தீர்வு:** தனக்குஉவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க்குஅல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

**பொருள்:** *தனக்கு இணையில்லாத கடவுளின் திருவடிகளைச் சேர்ந்தவர்க்கே அன்றி, மற்றவர்களுக்கு மனக்கவலையை போக்குவது கடினம்.*

**ஸ்**ந்தன் என்ற ஒரு மகா கஞ்சன், ஆலங்குடி என்ற ஊரில் வசித்து வந்தான். ஒரு நாள், விமான நிலையத்தைப் பார்ப்பதற்காக தன் மனைவியோடு சென்றான்.

விமானம் மேலே கிளம்புவதையும், வானில் வட்டமிடுவதையும், கீழே இறங்குவதையும், இருவரும் ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்தனர்.

அவர்களின் ஆர்வத்தைப் பார்த்த விமானி ஒருவர், நீங்கள் இருவரும் வாருங்கள் ஆளுக்கு நூறு ரூபாய் தான் வானத்தில் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வரலாம் என்றார். கஞ்சனுக்கு ஆர்வம் தான். ஆனால், செலவுக்கு பயந்து 'நாங்கள் வரவில்லை' என்றான்.

அவர்களிடம் பணம் பெற நினைத்த விமானி, உங்களை எந்தக் கட்டணமும் இல்லாமல் இனாமாகவே விமானத்தில் ஏற்றிச் செல்கிறேன். வானத்தில் விமானம் பறக்கும்போது என்ன நடந்தாலும், நீங்கள் சிறு சத்தம் கூடப் போடக் கூடாது. அப்படி சத்தம் போட்டால், இருநூறு ரூபாய் நீங்கள் கொடுத்துவிட வேண்டும் என்றார்.

கஞ்சன் தன் மனைவியுடன், விமானத்தில் ஏறி அமர்ந்தான். விமானம் தலை கீழாகப் பறந்தது. சீறிப் பாய்ந்தது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருந்த கஞ்சன், சத்தம் போடாமல் இருந்தான். விமானத்தைத் தரை இறக்கினார் விமானி.

கஞ்சனுக்கு கை கொடுத்து. நான் பயமுறுத்தும் விமான விளையாட்டுகளை வானத்தில் செய்யும்போது, வேறு யாராக இருந்தாலும் சத்தம்போட்டு இருப்பார்கள் ஆனால் நீங்கள் சிறு சத்தம் எழுப்பவில்லை. எப்படி இது உங்களால் முடிந்தது? என்று கேட்டார் விமானி.

நான் கூட, ஒரே ஒரு சமயம், என்மனைவி விமானத்தில் இருந்து கீழே விழுந்தபோது கத்த நினைத்தேன். நல்லவேளை கத்தாமல் இருந்தேன். கத்தியிருந்தால் கட்டணம் செலுத்த வேண்டியிருந்திருக்கும் என்றான் கஞ்சன். அதை கேட்ட விமானி மயங்கி விழுந்தார்.

**நீதி:** சிக்கனம் இருக்கலாம் ஆனால் கஞ்சத்தனம் இருத்தல் கூடாது.

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்

போக்கும் அதுவிளிந் தற்று. **– நிலையாமை (332)**

**பொருள்:** நாடக அரங்கிற்கு கூட்டம் வருவதுபோல் சிறுகச் சிறுக செல்வம் சேரும். நாடகம் முடிந்ததும் கூட்டம் கலைவதுபோல் மொத்தமாய் போய்விடும்.

# ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு



எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

ஒரு பணக்காரனுக்கு ஒரு தோட்டம் இருந்தது. அதில் இரண்டு தோட்டக்காரர்கள் இருந்தார்கள். ஒருவன் சோம்பேறி. வேலையே செய்ய மாட்டான். ஆனால், எஜமானன் தோட்டத்திற்கு வந்தால் போதும் உடனே எழுந்துபோய் கைகூப்பி வணங்கியபடி எஜமானனிடம், 'ஓ! என் எஜமானின் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது' என்று புகழ் பாடி அவர் முன்னால் பல்லை இளித்துக் கொண்டு நிற்பான்.

மற்றொரு வேலைக்காரன் அதிகம் பேசுவதில்லை. ஆனால், அவன் கடினமாக உழைப்பான். பல வகையான பழங்களையும் காய்கறிகளையும் பயிர் செய்து, நீண்ட தூரத்தில் வசிக்கும் தன்னுடைய எஜமானனின் வீட்டிற்குச் சுமந்துகொண்டு செல்வான். இந்த இரண்டு தோட்டக்காரர்களில் யாரை எஜமானன் அதிகம் விரும்புவார்? இறைவன்தான் அந்த எஜமானன். இந்த உலகம் அவரது தோட்டம். இங்கே இரண்டு வகையான தோட்டக்காரர்கள் இருக்கிறார்கள். ஒரு வகையினர் சோம்பேறிகள் ஏமாற்றுக்காரர்கள். அவர்கள் எதுவும் செய்வதில்லை இறைவனின் அழகான கண்களையும் மூக்கையும் மற்ற குணநலன்களையும் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். ஏழைகளும், பலவீனர்களுமான எல்லா மனிதர்களையும், விலங்குகள் மற்றும் அவரது படைப்புகள் அனைத்தையும் மிகுந்த கவனத்தோடு பராமரிப்பவர்கள் மற்றொரு வகையினர்.

இவர்களில் யார் இறைவனின் அன்பிற்கு உரியவர்கள்? நிச்சயமாக அவருடைய பிள்ளைகளுக்குச் சேவை செய்பவர்களே அவரது அன்பிற்கு உரியவர்கள்.

உண்மையில் இறைவனுக்கு நாம் எதையாது கொடுக்க முடியுமா? சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் எதை இறைவனுக்குப் படைத்தாலும் அவையாவும் அவர் படைத்ததே. அவர் எல்லாம் ஆனவர். எல்லாம் உடையவர். வேண்டுதல் வேண்டாமைத் தன்மையர். அப்பெருங்கருணைப் பெரும்பதிக்கு நாம் என்ன கொடுத்துவிட முடியும்?

ஆனால் வேறு வழியிருப்பதாக சித்தர் திருமூலர் திருமந்திரத்தில் அருளியுள்ளார்.

படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே.

நமது ஞானிகள் நமக்குக் காட்டும் இறைவழிபாட்டு முறை என்பது அன்பு நெறி. சிற்றுயிர்களிடத்தும் கருணை காட்ட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இறைவன் உலகத்தையும், நுகர் பொட்களையும் உயிர்கள் பெற்று இன்புறுவதற்கே படைத்தளித்தான். உயிர்களிடமிருந்து இறைவன் அன்பு ஒன்றைத் தவிர வேறு யாதொன்றும் பெற விரும்புவதில்லை. ஆனால், சமயவாதிகள் சடங்கு நெறியில் பற்று கொண்டு நின்று, மனிதனின் பசிக்கு உணவிட விரும்பாது இறைவனுக்குப் படையலிட்டு மகிழ்கின்றனர்.

இறைவன், மனிதன் அளிக்கும் உணவையும், படையலையும் உண்டு மகிழ்கின்றானா என்றால் இல்லை. அவன் அருட்கணக்கில் இடம்பெற விரும்பினால் பசித்திருப்போருக்கு உணவு அளியுங்கள். அதுவே இறைவனைச் சென்றடையும் அரிய பெருநெறி என்கிறார் திருமூலர்.

அதாவது, இறைவன் உருவத்தை ஓவியமாக எழுதி வைத்துள்ள இடம் படமாடக் கோயில். இந்த கோயில் சீவர்கள் இறைவனுக்கு கட்டிக்கொடுத்த வீடு. ஆனால், சிவபரம்பொருளால் சீவர்களாகிய நமக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுதான் நடமாடும் கோயில்களாகிய ஜீவதேகங்கள். மேலும்,

மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்
மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே என்றும் அருளியுள்ளார்.

ஆக, இதனின்று நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை என்னவெனில், சீவர்களுடைய தேகமே இறைவடிவம். அஃதே ஆகாயத் தலமாகிய சிதம்பரம். மேலும், சீவதேகமே சதாசவிம். அதாவது, ஐந்து கர்த்தாக்களுள் முதல்வராய், உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு இறைவன் மேற்கொள்ளும் மூர்த்தம். இறுதியாக இம்மனித வடிவமே இறைவன் திருக்கூத்து என்கிறார்.

எல்லா தேகங்களிலும் இறைவன் இருக்கிறார் என்றாலும், அவரது அருட்செயல் மிகவும் நடக்கும் இடம் இம்மனித தேகமே.

எனவே பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை அனுபவிக்கும் சீவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்து, திருவருள் துணையோடு அச்சீவர்களின் துன்பத்தை நீக்குவித்து இன்பத்தை உண்டுபண்ணுகிற ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைபிடிப்பதே உண்மையான கடவுள் வழிபாடு.

இதன் பலனாக நம் உள்ளம் தூய்மையடையும். அதனால் எல்லோரிடமும் குடிகொண்டிருக்கும் இறைவன் நம்மிடம் வெளிப்பட்டுத் தோன்றுவார். அவர் எல்லோருடைய உள்ளத்திலும் எப்போதும் இருக்கிறார். அழுக்கும் தூசியும் படிந்த கண்ணாடியில் நாம் நம் உருவத்தைப் பார்க்க முடியாது. அஞ்ஞானமும்; தீய குணங்களும் தான் நம் இதயம் என்ற கண்ணாடியில் படிந்திருக்கும் தூசியும் அழுக்குமாகும்.

இவ்வுலகதிலே இறை அரசாட்சி
இன்பத்தும் மற்றை இன்பத்தும்
எவ்வள வெனினும் இச்சை ஒன்றறியேன்
எண்ணுதோறு அருவருக் கின்றேன்
அவ்வுல கதிலே இந்திரர் பிரமர்
அரிமுதலோர் அடைகின்ற
கவ்வை இன்பத்தும் ஆசை சற்றறியேன்
எந்தை என் கருத்து அறிந்ததுவே என்றும்

இறக்கவும் ஆசை இல்லை இப்படி
நான் இருக்கவும் ஆசைஇன்றி நான்
பிறக்கவும் ஆசைஇலை உலகெல்லாம்
பெரியவர் பெரியவர் என்று
சிறக்கவும் ஆசை இலை விசித்திரங்கள்
செய்யவும் ஆசை ஒன்றில்லை
துறக்கவும் ஆசை இலை துயர்அடைந்து
தூங்கவும் ஆசை ஒன்றிலையே என்றும் எதிலும் ஆசை இல்லை

எனப் பாடியுள்ள நம் வள்ளல் பெருமானார்

மண்ணுலகு அதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒரு சிறிதுஎனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும் நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்
இசைத்தபோது இசைத்தபோது எல்லாம்
நண்ணும் அவ்வருத்தம் தவிர்க்கும் நல்வரம்தான்
நல்குதல் எனக்கு இச்சை எந்தாய்

*என்று இறைவனை வேண்டி நிற்கின்றார். மேலும், நம் வள்ளல் பெருமான் இறைவனோடு இரண்டறக் கலப்பதற்கு முன்பு நம்மவர்களுக்கு அருளியதாவது,*

"இராத்திரிகூட நான் இல்லாமல் இந்த ஜனங்கள் க்ஷணநேரம் இருக்க மாட்டார்களே என்று ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன். அது இங்கே இருக்கிற ஜனங்கள் மட்டில் மாத்திரமல்ல. உலகத்திலிருக்கிற எல்லா ஜனங்களையும் குறித்தே விண்ணப்பித்துக் கொண்டேன். ஏன் அப்படி ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன் என்றால், எல்லவரும் சகோதரர்களாதலாலும், இயற்கை உண்மை ஏகதேசங்களாதலாலும் நான் அங்ஙனம் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை வைத்துக் கொண்டிருக்கிறேன்.

இப்போது நீங்கள் இதுவரைக்கும் ஒழுக்கத்திற்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ்யர்களாயிருந்தாலும் சாலைக்கு போகக் கொஞ்ச தினம் இருக்கின்றது. அதற்குள்ளாக நீங்கள் நீங்களும் நல்லொழுக்கத்திற்கு வருவதோடுகூட மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்விதத் தந்திரமாவது செய்து நம்மவர்களாக்கிக் கொள்ள வேண்டியது. நீங்கள் கொஞ்ச தினத்திற்கு அப்படிச் செய்து கொண்டிருங்கள். நானும் ஆண்டவரிடத்தில் இவ்வுலகத்திலுள்ள எல்லா ஜீவர்களும் நன்மை அடையப் பிரார்த்தித்தும், ஆண்டவரிடத்தில் கேட்டுக்கொண்டும் வருகிறேன்" *என்கிறார்.*

*எல்லா உயிர்களின் வாட்டத்தைக் குறித்து பிரார்த்தித்தும், இறையருளால் அவ்வுயிர்களுக்கு நேரிடும் துன்பத்தை நீக்கியுமே நம் பெருமானார் திருவருளைப் பூரணமாகப் பெற்று இறவாத நிலையடைந்து எதிரற்ற சுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.*

*கடவுள் சர்வ ஜீவ தயாபரன்; சர்வ வல்லமையுடையவன். ஆகவே நம்மையும் சர்வ ஜீவதயை உடையவர்களாய்; சர்வ வல்லமையும் பெற்றுக் கொள்ளும்படி இம்மனித தேகத்தில் வருவித்தார் என்ற வள்ளல் பெருமானின் வாக்கினை நம்பி, ஜீவகாருண்ய ஒழுக்கத்தையே கடவுள் வழிபாடாகக் கொண்டு வாழ்ந்து இறையருளைப் பூரணமாகப் பெற்று வாழ்வோமாக!*

**வருமுயிர் இரக்கம் பற்றியே உலக வழக்கில் என்மனம் சென்றதோறும்**
**வெருவிநின் அடிக்கே விண்ணப்பித்து இருந்தேன் விண்ணப்பம் செய்கின்றேன் இன்றும்**
**உருவ என்உயிர்தான் உயிர்இரக்கம்தான் ஒன்றதே இரண்டிலை இரக்கம்**
**ஒருவில் என்உயிரும் ஒருவும் என்உள்ளத்து ஒருவனே நின்பதத்தாணை**

**திருச்சிற்றம்பலம்**

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

Wings of Wisdom

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



### Key advantages

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

Suriyaa Digital
Porur - 9677227755

# எழுவகை அவத்தைகள்

## பசி

ஆகாரம் பெறாமையால் வயிற்றினுள் பற்றி நின்று தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங்களின் தன்மைகளைச் சுடுதல் செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவிப்பதற்கு முதற் காரணமாகிய விகற்ப மாயா காரியப் பிண்டப்பகுதி நெருப்பு.

## கொலை

தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங்களைப் பல்வேறு கருவிகரணப் புடைபெயர்ச்சிகளால் பதைப்புண்டாகக் கலகம் செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவித்தற்கு நிமித்தமாகிய விகற்ப பூதகாரிய கொடுந்தொழில்.

## பிணி

வாத, பித்த, சிலேத்தும விகற்பங்களால் மாறுபட்டு தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங்களை நலிவு செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவித்தற்கு நிமித்தமாக நின்ற விகற்ப மாயா காரியப் பிண்டப்பகுதி வேற்றுமை விளைவு.

## ஆபத்து

அகங்காரத்தாலும், மறதியாலும், கரும வேறுபாட்டாலும், தேகபோக அனுபவங்களைத் தடுக்கின்ற விக்கினங்கள்.

## பயம்

தேக முதலிய கருவிகளுக்கு நட்டம் செய்வதாகிய விடயங்கள் நேரிட்டபோது கரணங்களுக்கும், அறிவுக்கும் உண்டாகின்ற நடுக்கம்.

## இன்மை

கல்வி, செல்வம், முதலிய கருவிகளைத் தற்சுதந்திரத்தில் பெறாமை.

## இச்சை

அடையக்கருதிய விடயங்களின் அருமை குறித்து அவற்றை மேன்மேலும் கருதச் செய்கின்ற சித்தவிருத்தி என்று அறிய வேண்டும்.

**இ**வற்றுள் பசி, கொலை என்பவை இம்மை இன்பம், மறுமை இன்பம், பேரின்பம் என்கின்ற மூன்றையும் தடுத்தலால் **முதற்பட்ட தடையாம்.** பிணி, பயம், ஆபத்து, இன்மை என்பவை இம்மை, மறுமை இன்பங்களை சிறிது தடுத்தலால் **இடைப்பட்ட தடையாம்.** இச்சை இம்மை இன்பத்தை சிறிது தடுத்தலால் **கடைப்பட்ட தடையாம்.**

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**தாய் கருப்பையினுள் தங்கிய உயிர்களை**
**ஆய்வுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி**

*தாய்க் கருப்பையினுள் - தாயின் கருப்பையில்*
*தங்கிய உயிர்களை - தங்கி வளரும் உயிர்களை*
*ஆய்வுறக் காத்தருள் - முறையே காப்பாற்றி அருள்கின்ற*
*அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி இறைவா!*

*பத்து மாதம் தாயின் கருப்பையில் உயிரை எப்படியெல்லாம் இறைவன் காப்பாற்றி அருள்கின்றார் என்பதை மாணிக்கவாசகர் திருவாசகப் போற்றித் திருஅகவலில் அருளியுள்ளதைக் காண்போம்.*

**மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து**
**ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்**
**ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்**
**இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்**
**மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்**
**ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும்**
**அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்**
**ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்**
**ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்**
**எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்**
**ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்**
**தக்க தசமதி தாயொடு தான்படும்**
**துக்கசாகரத் துயரிடைப் பிழைத்தும்**

*என்று கூறுகின்றார். இதைப்போன்றே இதைவிட விரிவாக உரைநடையில், வள்ளல் பெருமான் சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருவிண்ணப்பத்தில் கூறியுள்ளதை அப்படியே இதன்கீழ் எடுத்துக் காட்டுகின்றோம். மேற்காட்டிய திருவாசக வரிகளின் விரிவுபோன்றே வள்ளல் பெருமானின் இவ்வுரைநடை விண்ணப்பம் அமைந்துள்ளமை காண்க.*

*இயற்கை உண்மை நிறைவாகியுள்ள ஓர் சுத்த சிவானுபவ வெளியில், இயற்கை விளக்கநிறைவாகிவிளங்கிய அருட்பெருஞ்ஜோதி சொரூபராய், இயற்கை இன்ப நிறைவாகி ஓங்கிய சிவானந்த ஒருமைத் திருநடச் செய்கையை எல்லா உயிர்களும் இன்பம் அடைதற்பொருட்டுத் திருவுளக் கருணையால் செய்தருளுகின்ற சர்வ வல்லபராகிய தனித் தலைமைக் கடவுளே!*

*அறிவென்பது ஓர் சிறிதும் தோற்றாத அஞ்ஞானம் என்னும் பெரிய பாசாந்தகாரத்தில் நெடுங்காலம் சிற்றணுப் பசுவாகி அருகிக்கிடந்த அடியேனுக்குள் உள்ளொளியாகி இருந்து அப்பாசாந்தகாரத்தினின்றும் எடுத்து, எல்லாப் பிறப்புடம்புகளிலும் உயர்வுடைத்தாகிய ஆறறிவுள்ள இம்மனிதப் பிறப்புடம்பில் என்னை விடுத்துச் சிறிது அறிவு விளங்கச் செய்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை எங்ஙனம் அறிவேன்! எவ்வாறு கருதுவேன்! என்னென்று சொல்வேன்!*

*எல்லாம் வல்ல இயற்கை உண்மைக் கடவுளே! உபசாரத்தால் பெற்ற தந்தை என்பான் ஒருவனது சுக்கிலத் துளியின்கண் என்னை ஓர் பகுதிப் பேரணுவுருவில் பெருகி வெளிப்படவிருத்திய காலத்திலும், எனக்குள் உள்ளொளியாகி இருந்து அப்பகுதி பேரணுவுருவைச் சிருட்டித்தருளினீர்.*

*அன்றிப் புறத்தில் யாவராலும் சகிக்கப்படாத அதன் அருவருப்பையும் அசுத்தத்தையும் தீநாற்றத்தையும் சகித்து, அச்சுக்கிலத் துளியினிடத்து ஓர் ஆவி உருவாகி இருந்து அத்துளியின்கண் உள்ள பல்வகை விரோத தத்துவங்களால் சிறிதும் தடைபடாமல் என்னுருவையும் காத்தருளினீர். அன்றி, அங்ஙனம் அரும்பிய ஆன்மசத்திக் கலைகள் வெளிப்பட விளக்கி வளர்த்தும் அருளினீர்.*

*உபசாரத்தால் பெற்ற தாய் என்பாள் ஒருத்தியின் சோணிதத் திரளில் என் உருவைச் சேர்க்கும் வரையில் அப்போதப்போது என்னுருவைச் சிதைப்பதற்கு எதிரிட்ட துரிசுகள் எல்லாவற்றையும் நிக்கிரகம் செய்தருளினீர். இங்ஙனம் புரிந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை எங்ஙனம் அறிவேன்! எவ்வாறு கருதுவேன்! என்னென்று சொல்வேன்!*

*எல்லாம் உடைய இயற்கை விளக்கக் கடவுளே! தாய் கருப்பையில் சோணிதத் திரளில் சேர்த்து என்னை ஓர் பூதப் பேரணு உருவில் பெருகி வெளிப்பட இருத்திய காலத்திலும், எனக்குள் உள்ளொளியாகி இருந்து அப்பூதப் பேரணு உருவைச் சிருட்டித்தருளினீர். அன்றிப் புறத்தில் எவராலும் சிறிதும் சகிக்கப்படாத அதன் அசுத்தம் அருவருப்பு துற்கந்தம் முதலியவற்றை பொறுத்து அச்சோணிதத் திரளில் ஓர் ஆவி உருவாகி இருந்து, அத்திரளினுள்ள பல்வகை விரோதத் தத்துவங்களால் சிறிதும் தடைபடாமல் என்னுருவைக் காத்தருளினீர். அன்றியும், அவ்விடத்து எதிரிட்ட துரிசுகள் எல்லாவற்றையும் நிக்கிரகம் செய்தருளினீர்.*

*அன்றி, அங்ஙனம் பூத்த ஆன்ம சத்திக் கலைகள் வாட்டமடையாது வெளிப்பட்டு விளங்க வளர்த்தருளினீர்.*

அன்றியும், தாய் கருப்பையினிடத்துப் பூதப்பேரணு உருவில் கிடந்த என்னை அக்கருப்பையில் பவுதிக பிண்ட வடிவிலிருத்தும் வரையில் நச்சுக்கிருமி, நச்சுக்காற்று, நச்சுச்சுவாலை முதலிய உற்பாத வகைகளால் எனது பூதப் பேரணுவுரு சிதறி வேறுபடாமலும் காத்தருளினீர்.

அன்றியும், தாய் கருப்பையில் பவுதிகப் பிண்ட வடிவில் என்னை இருத்திய காலத்திலும், எனது இச்சை ஞானம் கிரியைகளை வெளிப்படுத்துதல் முதலிய உபகரிப்பு அதிகரிப்புகளுக்கு உரிய உபயோக தத்துவ உறுப்புகள் எல்லாவற்றையும் குறைவின்றி வகுத்து அமைத்து வளர்த்துக் காத்தருளினீர்.

அன்றியும், அடியேன் தாய் கருப்பையில் பிண்ட வடிவில் கிடந்த காலத்து, இரும்பில் பெரிதும் கடினமுடையதாய், இருட்டுக் குகையில் பெரிதும் இருளுடையதாய், மிகவும் சிற்றளவு உடையதாய், அசுத்த முதலியவற்றால் நிரம்பிய அக்கருப்பையினுள் நெருக்கத்தாலும், வெப்பத்தாலும், புழுங்கிய புழுக்கத்தாலும் வருந்தி வருந்திக் களைத்தபோதெல்லாம் அங்ஙனம் அமுதக்காற்றை அடிக்கடி மெல்லென வீசுவித்து அவ்வருத்தமும் களைப்பும் தவிர்த்துக் காத்தருளினீர்.

அன்றியும், தாய் கருப்பையில் பிண்ட வடிவில் கிடந்து பசியினால் பரதவித்து மூர்ச்சித்தபோதெல்லாம், பூதகாரிய அமுதத்தை எனக்கு ஊட்டுவித்துப் பசியை நீக்கி மூர்ச்சை தெளிவித்து அருளினீர்.

அன்றியும், தாய் கருப்பையில் பிண்ட வடிவில் கிடந்து பேய் வெருட்டாலும், பேரிருட்டாலும் பயந்தபோதெல்லாம் நாதவொலியால் பேய்வெருட்டையும், விந்து விளக்கத்தால் பேரிருட்டையும் தவிர்த்து என் பயத்தை நீக்கியருளினீர். அன்றி, தாய் கருப்பையின்கண் நேரிட்ட பெருந்தீ, பெருங்காற்று, பேரோசை, பெருவெள்ளம், பெரும்புழு முதலிய உற்பாத துரிசுகள் அனைத்தையும் தவிர்த்துக் காத்து, அப்பிண்ட வடிவில் எனக்கு ஓரறிவையும் விளக்கி அருளினீர்.

அன்றியும், உலகினிடத்தே பிறந்து அனுபவிப்பதற்குரிய சுபஅனுபவப் பெருக்கம், ஆயுள் பெருக்கம் முதலிய நன்மைகளையும் எனக்கு அப்பிண்ட வடிவின்கண்ணே அமைத்தருளினீர்.

அன்றியும், சோணிதக் காற்றின் அடிபடல், யோனி நெருக்குண்ணல் முதலிய அவத்தைகளால் அபாயம் நேரிடவொட்டாமல் காத்து இவ்வுலகினிடத்தே தோற்றுவித்து அருளினீர். இங்ஙனம் புரிந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை எங்ஙனம் அறிவேன்! எவ்வாறு கருதுவேன்! என்னென்று துதிப்பேன்!

எல்லாமாகிய இயற்கை இன்பக் கடவுளே! தந்தை என்பவனது சுக்கிலப் பையின்கண் யான் வந்தமைந்த கணப்போது தொடங்கி

*தாய் என்பவளது சோணிதப் பையின்கண் சென்றடைந்த கணப்போதிற்கு முன்கணப்போது வரையுமாக என்னால் ஒருவாறு அளவிடப்பட்ட ஒருகோடி ஒன்பது லக்ஷத்து அறுபதினாயிரம் கணப்போது பரியந்தம் எவ்வகைத் தடைகளும் வாராதபடி, பகுதிப் பேரணு உருவில் கிடந்த எனது அகத்தினும் புறத்தினும் அருவாகியும், உருவாகியும் சலித்தல் முதலியவின்றி அன்பொடும் அருளொடும் பாதுகாத்திருந்த தேவரீரது திருவருட்பெருங்கருணைத் தன்மைக்கு இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது பாதுகாத்தலில் சலிப்படைந்தும், தளர்ச்சியடைந்தும், அருவருப்புற்றும், சுதந்தரமற்றும், பராக்கிலிருந்தும் தடைபடுகின்ற தந்தை முதலிய ஜீவர்கள் கருணைத் தன்மையை ஒப்பென்று சொல்வதற்கு எவ்விதத்தினும் சிறுதாயினும் மனம் துணியாமையால் அங்ஙனம் உபசரியாதவனாகி இருக்கின்றேன். ஆகலில், தேவரீரது திருவருட் பெருங்கருணையை என்னென்று கருதுவேன்! என்னென்று துதிப்பேன்!*

*அருட்பெருஞ்ஜோதித் தனித்தலைமைக் கடவுளே! தாய் என்பவளது சோணிதப் பையின்கண் யான் வந்தமைந்த கணப்போது தொடங்கி இவ்வுலகில் தோன்றிய கணப்போதிற்கு முன் கணப்போது வரையுமாக, என்னால் ஒருவாறு அளவிடப்பட்ட ஆறுகோடி நாற்பத்தெட்டு லக்ஷம் கணப்போது பரியந்தம் எவ்வகைத் தடைகளும் எவ்வகை ஆபத்துகளும் வாராதபடி பூதப் பேரணு உருவிலும் பிண்டப் பெருவடிவிலும் கிடந்த எனது அகத்தினும் புறத்தினும் அருவாகியும் உருவாகியும் சலித்தல் முதலியவின்றிப் பெருந்தயவினோடு பாதுகாத்திருந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் தன்மைக்கு இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது பாதுகாத்தலில் சலித்தும், தளர்ந்தும், அருவருத்தும், பரதந்திரித்தும், பராக்கடைந்தும் தடைபடுகின்ற தாய் முதலிய ஜீவர் கருணைத் தன்மையை ஒப்பென்று சொல்வதற்கு எவ்வகையினும் எத்துணையும் மனம் துணியாமையால், அங்ஙனம் உபசரியாதவனாகி இருக்கின்றேன். ஆகலில் தேவரீரது திருவருட் பெருங்கருணையை என்னென்று கருதுவேன்! எங்ஙனம் துதிப்பேன்!*

*யாவராலும் பிரித்தற்கு ஒருவாற்றானும் கூடாத பாசமென்னும் மகாந்தகாரத்தில் யான் அது என்னும் பேதம் தோன்றாது அருகிக் கலந்து அளவிறந்த காலம் முன்பின் என்பதின்றி மூர்ச்சித்துக் கிடந்த என்னை அம்மகாந்தகாரத்தினின்றும் ஓர் கணப்பொழுதினுள் அதிகாரணக் கிரியையால் அதிகாரணப் பகுதியுருவில் பிரித்தெடுத்து அருளிய தேவரீரது திருவருட் பேராற்றலை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!*

சத்திய ஞானானந்தத் தனித்தலைமைக் கடவுளே! காரணக் கிரியையால் காரணப் பகுதி உருவினும், அதிசூக்குமக் கிரியையால் அதிசூக்குமப் பகுதி உருவினும், சூக்குமக் கிரியையால் சூக்குமப் பகுதி உருவினும், பரத்துவ சத்திசத்தரால் பூதவுருவினும், அபரத்துவ சத்தி சத்தரால் பவுதிக வடிவினும் ஓர் கணப்போதினுள் என்னைச் செலுத்தாமல் செலுத்திய தேவரீரது திருவருட் பேராற்றலை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

அகண்ட பூரணானந்தராகிய அருட்பெருஞ்ஜோதிக் கடவுளே! ஜீவனை ஆதரிப்பிக்கும் பூதப் பிருதுவித் தோற்றமும், ஜீவனை விருத்தி செய்விக்கும் பூதநீர்த் தோற்றமும், ஜீவனை விளக்கம் செய்விக்கும் பூதாக்கினித் தோற்றமும், ஜீவனை அதிகரிப்பிக்கும் பூதவாயுத் தோற்றமும், ஜீவனை வியாபகம் செய்விக்கும் பூதவெளித் தோற்றமும் உபப்பிருதிவி, உபநீர், உபாக்கினி, உபவாயு முதலிய தோற்றங்களும் அவைகள் இருக்கும் இடங்களும், தொழிலிடம் முதலிய இடங்களும்;

ஒலியறிவு, உருவறிவு, சுவையறிவு, நாற்ற அறிவு, பரிச அறிவு என்னும் ஐவகை குண அறிவுகளும், அவைகள் இருத்தற்குரிய செவி, கண், நாக்கு, மூக்கு, மெய் என்னும் உள்ளிடப் பொறிகளும், அவைகள் உத்தியோகித்தற்குரிய வெளியிடப் பொறிகளும்;

வசனித்தறிதல், நடந்தறிதல், கொடுத்தெடுத்தறிதல், மலம் விடுத்தறிதல், சலம் விடுத்தறிதல் என்னும் ஐவகைத் தொழில் அறிவுகளும், அவைகள் இருத்தற்குரிய வாக்கு, பாதம், கை, நீர்வாயில், அபானவாயில் என்னும் கரும உள்ளிடப் பொறிகளும், அவைகள் தொழிற்படற்குரிய கருமப் புறவிடப் பொறிகளும்;

நினைத்தல், விசாரித்தல், நிச்சயித்தல், அகங்கரித்தல் என்னும் சூக்குமக் கரணத் தொழில்களும் அவைகளை இயற்றும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் சூக்கும கரணங்களும், அவைகளை இயற்றுவிக்கும் அதிசூக்கும கரணங்களும், அக்கரணங்களின் உபகரணங்களாகிப் பலபல பேதப்பட்டு விரிந்த சத்துவம், ராஜசம், தாமசம் முதலிய குணங்களும், அவைகள் இருத்தற்கும் உத்தியோகித்தற்கும் இடங்களும்;

பருவம் செய்தல், தகுதி செய்தல், இச்சை செய்தல், தெளிவு செய்தல், அதிகாரம் செய்தல், காரணம் செய்தல், காரியம் செய்தல் முதலிய இடைப்பாட்டுத் தொழில்களும்; அவைகளை இயற்றும் பொழுது, இயைபு, இச்சை, அறிவு முதலிய கருவிகளும்; அக்கருவிகளுக்குரிய இடங்களும், அவைகள் உத்தியோகித்தற்குரிய இடங்களும்;

துரிசு நீக்குவித்தல், சுகம் விளைவித்தல், தூய்மை செய்வித்தல், இன்பமடைதற்கு வழியாய் இருத்தல், துணையாய் இருத்தல் முதலிய பரத்துவத் தொழில்களும், அவைகளை இயற்றுதற்குரிய தத்துவங்களும், அவைகள் இருத்தற்குரிய இடங்களும், பிரேரித்தற்குரிய இடங்களும்;

அறிதல், அறிவித்தல், அனுபவித்தல், அனுபவிப்பித்தல் முதலிய முக்கியத் தொழில்களும், அவைகளை இயற்றுகின்ற சத்திசத்தர்களும், அவர்கள் இருத்தற்குரிய இடங்களும், அவர்கள் அதிகரித்தற்குரிய இடங்களும்;

வாதவிருத்தி, பித்தவிருத்தி, சிலேட்டும விருத்திகளும்; அவைகள் இருத்தற்குரிய இடங்களும், உத்தியோகிக்கும் இடங்களும்; சூரிய சத்தி, சந்திர சத்தி, அக்கினி சத்தி, தாரகை சத்தி, பிரமசத்தி, மாயாசத்தி, ருத்திரசத்தி முதலிய சத்திகளும், அவர்கள் இருத்தற்கும் அதிகரித்தற்கும் உரிய இடங்களும், அச்சத்திகளை நடத்தும் சத்தர்களும், அவர்கள் இருத்தற்கும் அதிகரித்தற்கும் உரிய இடங்களும்;

நனவு, கனவு, சுழுத்தி முதலிய அவத்தைகளும், அவைகள் இருத்தற்குரிய இடங்களும், இங்ஙனம் இன்னும் பற்பல அகவுறுப்புக்களும், அகப்புற உறுப்புக்களும்;

மீத்தோல், புடைத்தோல், வன்தோல், மென்தோல் முதலிய தோல் வகைகளும்; வெண்ணரம்பு, செந்நரம்பு, பசுநரம்பு, சிறுநரம்பு, பெருநரம்பு முதலிய நரம்பின் வகைகளும்; பேரென்பு, சிற்றென்பு, நீட்டென்பு, முடக்கென்பு முதலிய எலும்பின் வகைகளும்;

நல்லிரத்தம், புல்லிரத்தம், கலவைரத்தம், கபிலைரத்தம் முதலிய இரத்த வகைகளும்; மெல்லிறைச்சி, கல்லிறைச்சி, மண்ணிறைச்சி, நீரிறைச்சி முதலிய இறைச்சி வகைகளும்; மேனிலைச் சுக்கிலம், கீழ்நிலைச் சுக்கிலம் முதலிய சுக்கில வகைகளும்;

ஓங்கார மூளை, ஆங்கார மூளை முதலிய மூளை வகைகளும்; தலையமுதம், இடையமுதம் முதலிய அமுத வகைகளும்; வெண்மை, செம்மை, பசுமை, கருமை, பொன்மை என்னும் வண்ண வகைகளும்; வெண்மையில் செம்மை, வெண்மையில் பசுமை, வெண்மையில் கருமை, வெண்மையில் பொன்மை, செம்மையில் வெண்மை, செம்மையில் பசுமை, செம்மையில் கருமை, செம்மையில் பொன்மை, பசுமையில் வெண்மை, பசுமையில் செம்மை, பசுமையில் பொன்மை, பசுமையில் கருமை, கருமையில் வெண்மை, கருமையில் செம்மை, கருமையில் பசுமை, கருமையில் பொன்மை, பொன்மையில் வெண்மை, பொன்மையில் செம்மை, பொன்மையில் பசுமை, பொன்மையில் கருமை என்னும் வண்ண பேத வகைகளும்;

இவைகள் இவைகள் இருத்தற்குரிய இடங்களும், செயல் வகைகளும், பயன் வகைகளும் இங்ஙனம் இன்னும் பற்பல புறவுறுப்புகளும், புறப்புற உறுப்புகளும் எனக்கு உபகரிக்கும் பொருட்டு இப்பவுதிக வடிவின்கண் ஒருங்கே உண்ணின்று தோன்ற, உண்ணின்று தோற்றாது தோற்றுவித்த தேவரீரது திருவருட் பேராற்றலை எங்ஙனம் அறிந்து எவ்வாறு கருதி என்னென்று துதிப்பேன்!

மேலே எடுத்துக்காட்டிய இஃது, வள்ளல் பெருமான் அருளிய உரைநடை விண்ணப்பத்தின் ஒருபகுதி மட்டுமே. விண்ணப்பம் மேலும் தொடர்ந்து சென்று நிறைவு பெறுகின்றது. அவ்வளவும் தத்துவம், தத்துவம், தத்துவம்.

எடுத்துக்காட்டிய இப்பகுதியில், பிறப்புக்கு முந்திய நிலையிலிருந்து, பிறப்பது வரை, தந்தையின் கருவில் சுமாராக இரண்டு மாதங்களும் (ஒருகோடி ஒன்பது லட்சத்து அறுபதினாயிரம் கணப்போது), தாயின் கருப்பையில் பத்து மாதங்களும் (ஆறு கோடி நாற்பத்து எட்டு லட்சம் கணப்போது) ஆகப் பன்னிரண்டு மாதங்களின் நிகழ்வுகள், பட்ட துன்பங்கள், காப்பாற்றப்பட்ட பேறு ஆகியன விரிவாகக் கூறப்பெற்றன.

இவ்விதம் தந்தையின் சுக்கிலப்பையிலும், தாயின் கருப்பையிலும் தோன்றாத் துணையாக இருந்து எல்லாத் தத்துவங்களையும் வளர்த்து நம்மையும் காத்து அருள்கின்றார் கருணாமூர்த்தியாகிய அருட்பெருஞ்ஜோதி இறைவன். இதையே இந்த அகவல் வரிகள் வியந்து உரைக்கின்றன.

திருச்சிற்றம்பலம்


## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 8012680865**

# சத்விசாரம்



**வேதாந்திகள், ‘‘பாவம் முதலிய கருமங்களும் புண்ணியம் முதலிய ஏதுக்களும் நமக்கில்லை. நாம் சர்வ சாக்ஷி’’ என்கின்றார்களே. அஃதென்ன?**

தேகவாசனை, இந்திரிய வாசனை, கரண வாசனை, பிராண வாயுவின் செயற்கையில் உண்டாகும் வேறுபாடு முதலிய நன்மைகளில் சலிப்பற்று ஆகாரம், நித்திரை, பயம் முதலியவைகளில் தாம் சலித்தும், சோர்ந்தும், திடுக்கிட்டும் இல்லாமல் நிவாத தீபம்போல் விளங்கும் ஜீவன் முத்தர்கள் சமூகத்தில் பாவ கிருத்தியங்கள் நடவா; புண்ணியங்களும் பிரயோஜனம் பற்றிச் செய்யார்கள்; பொன்னும் ஓடும் சரியாகக் காண்பார்கள். அத்தன்மையுடைய நித்திய முத்த சுத்த ஞான தேக சித்தர்கட்குப் பாவபுண்ணியம் இல்லை என்று அவர்கள் சொல்ல வேண்டியது இல்லை. நமக்கே தெரியும்.

மேலும், அவர்கள் இந்தப் பவுதிக சரீரத்தில் வசித்தாலும் சரீரமாகிய தத்துவ தாத்விகங்கள் இப்போது நமக்கு அசுத்த தேகமாயும், அசுத்தப் பொறியாயும், அசுத்தக் கரணமாயும், அசுத்த அனுபவமாயும், அசுத்த அறிவாயும் இருப்பதுபோல் இரா.



தத்தப்படத்தைப்போல் அறிவே வடிவாய், அறிவேபொறியாய், அறிவே மனமாய், அறிவே அழகாய், அறிவே உருவாய், அறிவே உணர்வாய், அறிவே அனுபவமாய், அறிவே அறிவாய் விளங்கும்.

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| காலை அரசு மருத்துவமனையில் கஞ்சி வார்த்தல் | – ரூ.2,000/– |
| காலை அன்னதானதிற்கு | – ரூ.2,500/– |
| மதிய சிறப்பு அன்னதானதிற்கு | – ரூ.8,500/– |
| மதிய அன்னதானதிற்கு | – ரூ.5,000/– |
| இரவு சிறப்பு அன்னதானதிற்கு | – ரூ.7,500/– |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானதிற்கு | – ரூ.15,000/– |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு நாளைக்கு) | – ரூ.2,500/– |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) –15லி | – ரூ.1,900/– |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through: HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை – 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**+91 9487454688**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# திருகார்த்திகை தீப திருவிழா அழைப்பிதழ்



அன்புள்ளம் கொண்ட ஆன்மநேய அன்பர்கள் அனைவருக்கும் வந்தனம்! திருஅருணை அருணாச்சல திருத்தலத்தில் லட்சோபலட்சம் பக்தர்கள் கூடி தரிசனம் செய்கின்ற சித்ரா பௌர்ணமி திருநாளினை முன்னிட்டு நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் அன்னதானம், சாதுக்கள் சத்சங்கம் மற்றும் திருஅருட்பா இசை கச்சேரி ஆகிய நிகழ்ச்சிகள் அடங்கிய விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வமயம் தாங்கள் அனைவரும் வருகை தந்து தொண்டில் பங்கேற்று குருவருளையும் திருவருளையும் பெற்று வாழ்வாங்கு வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

ஏப்ரல்
18
2019

**நாள்: 18.04.2019 வியாழக்கிழமை**

**இடம்: சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், திருவண்ணாமலை.**



**திருவருட்பா**

தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார்திருக் கோயில்கண் டிடவும்
துங்கமே பெறுஞ்சற் சங்கம்நீ டூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய்.

## நிகழ்ச்சி நிரல்:-

- அகவல் பாராயணம்
- சத்சங்கம்
- மஹா அன்னதானம்
- ஆன்மீக கண்காட்சி
- திருஅருட்பா இசைக் கச்சேரி
- திருஅருட்பா இலவச புத்தகம் வழங்குதல்

*அன்பர்களை இந்த சத்சங்க விழாவின் அறப்பணிகளுக்கு தங்களால் இயன்ற நன்கொடையை அளித்துப் புண்ணிய கைங்கரியத்தில் பங்குகொண்டு உய்யுமாறு வேண்டுகிறோம்.*

அன்பர்கள் தங்கள் நன்கொடைகளை அறக்கட்டளையின் வங்கிக் கணக்கான

**Account details:-** Bank: HDFC Bank Ltd,
Name: Arutperunjothi Vallalar Charitable Trust,
A/C.No: 08761450000048, Branch: Tiruvannamalai,
IFSC Code: HDFC0000876 ல் அளிக்கவும்.

தொடர்புக்கு: +91 99427 76351, +91 88385 40176

**அனைவரும் வருக! குருவருள் பெறுக!!**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly March 2019, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



# வடலூர் மாதப்பூசம்

**13.04.2019** – பங்குனி 30 – சனி

**21.04.2019** – சித்திரை 08 – ஞாயிறு – பெருமானார் அருட்பெருஞ்ஜோதி அகவல் அருளிய நாள்

**10.05.2019** – சித்திரை 27 – வெள்ளி

**25.05.2019** – வைகாசி 11 – சனி – வள்ளல் பெருமானார் வடலூரில் சத்திய தருமச்சாலை துவக்கிய நாள் **(1867)**

**07.06.2019** – வைகாசி 24 – வெள்ளிக்கிழமை

**04.07.2019** – ஆனி 18 – வியாழக்கிழமை

**31.07.2019** – ஆடி 15 – புதன்கிழமை

**28.08.2019** – ஆவணி 11 – புதன்கிழமை

**24.09.2019** – புரட்டாசி 07 – செவ்வாய்க்கிழமை

தொடர்புக்கு: **88385 40176, 63801 11475**

*அனைவரும் வருக! குருவருள் பெறுக!!*

திரு/திருமதி

Redirect to : அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: **+91 80126 80865**